**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

| | |
|---|---|
| **Case No** | **: DV. No. 1/2024** |
| **Prosecution Witness** | **: P.W. 1** |

| | | | |
|---|---|---|---|
| Name | : மரிய அந்தோணி செல்வி | | : |
| Father / Husband Name | : அந்தோணிராஜ் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(R1 present.)

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **06/09/2024**

**குறுக்கு விசாரணை ( எதிர்மனுதாரர் தரப்பில் )**

நான் மருத்துவ பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் தற்போது முதுகலை மருத்துவ படிப்பிற்கு தேர்வு எழுதியுள்ளேன். தற்போது பெரியபாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணியிலிருந்து வருகிறேன். மேற்படி பணி நிரந்தர அரசுப்பணியாகும். தோராயமாக எனது மாத சம்பளம் பிடித்தத்துடன் சேர்த்து ரூ.1,03,000/- ஆகும். எனக்கும் முதல் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமாகும். நான் மேற்படி விவரத்தை எனது மனுவிலும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள காமநாயக்கன்பட்டி ஆகும்.

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் யார் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால், மேற்படி விவரமாக சொல்ல வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 2வது பத்தியில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைதான். 03.06.2018ம் தேதியில் தான் எனக்கு திருமணம் நடைபெற்றது. மேற்படி அதே தேதியில் தான் திருமண வரவேற்பு நிகழ்வும் நடைபெற்றது. திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்ற போது ரூ.10 லட்சம் செலவு செய்ததாக சொல்லியிருக்கும் நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது ஊர் வழக்கப்படி கிருஸ்தவ முறையில் திருமணம் நடைபெற்றால் அனைத்து செலவுகளையும் கணவர் வீட்டில் தான் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் எனது திருமணத்தில் பகுதி செலவு தொகைகளை எதிர்மனுதாரா் வீட்டார் எங்கள் குடும்பத்தாரே ஏற்றுக் கொள்ளும்படி கூறினார்கள். மேற்படி செலவுத் தொகைகளாக ரூ.7 1/2 லட்சம் எங்கள் வீட்டில்

WEB COPY

செலவு செய்தார்கள். நான் அதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் மேற்படி சங்கதி பொய் என்றால் சரியல்ல. ரூ.1,90,000/- எனது தந்தையின் வங்கிக் கணக்கிலிருந்து முதல் எதிர்மனுதாரரின் வங்கிக் கணக்கிற்கு பணப் பரிமாற்றம் செய்யப்பட்டது. மீதத் தொகை ரொக்கப் பணமாக எனது வீட்டார்கள் எதிர்மனுதாரரின் வீட்டில் கொடுத்தார்கள். மேற்படி பணத்தை எப்போது, எங்கு, யார் மூலமாக எங்கு வைத்து கொடுத்தார்கள் என்ற விவரத்தை எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

திருமணத்தின்போது எனது வீட்டில் 70 சவரன் போட்டதற்கான ஆவணங்கள் எதுவும் தற்போது இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வீட்டில் எதிர்மனுதாரருக்கு 10 சவரன் நகை போட்டதாக சொல்லியிருக்கும் நிலையில் அதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நகைகள் எதிர்மனுதாரர் வசம் இருப்பதாக சொல்லியிருக்கும் சங்கதி பொய் என்றாலும், எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து கிளம்பும்போது நான் எடுத்துச் சென்றேன் என்றாலும், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 3வது பத்தியில் எதிர்மனுதாரர் வீட்டார்கள் சொல்லியுள்ளவாறு ரூ.7,50,000/- வற்புறுத்தி, அச்சுறுத்தி கேட்டார்கள் என்ற சங்கதி பொய் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே அவ்வாறு வற்புறுத்தி அச்சுறுத்தி கேட்டிருந்தால் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்திருக்க மாட்டேன் என்றாலும், எனது பெற்றோர்களிடம் நான் அதுபற்றி கூறியபோது அவர்கள் எனக்கு இரண்டு தங்கைகள் இருப்பதாலும், அந்த சமயம் நிச்சயதார்த்தம் முடிவடைந்திருந்த காரணத்தினாலும், திருமணம் செய்து கொள்ளுமாறு கூறினார்கள். மேற்படி சங்கதியின்படி விருப்பமில்லாமல் எனது பெற்றோரின் அழுத்தத்தின் படி தான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.

நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 4வது பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைதான். திருமணத்திற்கு பின்னர் நானும் எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் பெற்றோர்களுடன் ஒரே வீட்டில் வெவ்வேறு பகுதியில் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் தான் திருமணம் நடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மேற்படி அவர்களது வீட்டில் வேறு பகுதியில் வசித்துக் கொள்ளுமாறு கூறினார்கள். நான் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள படி எதிர்மனுதாரர் வீட்டில் 20 சவரன் நகைகள் வாங்கி வரச்சொல்லி என்னை துன்புறுத்தவில்லை என்றால் , சரியல்ல. மேற்படி நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கு நான் புகார் எதுவும் கொடுக்காததால் மேற்படி சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் என் வீட்டில் இதுபற்றி கூறியபோது திருமணமான புதிதில் பிரச்சனைகள் வருவதாக கூறியதால் நான் அதுபற்றி புகார் கொடுக்கவில்லை.

எனக்கு திருமணத்திற்கு பின்னர் ஒரு வீட்டில் பெண்ணிற்கு பிரச்சனைகள் ஏற்பட்டால் புகார் கொடுக்க வேண்டும் என்ற விவரம் தெரிந்து கொண்டும், வழக்கின் மனுதாரராகிய எனக்கு வீட்டில துன்புறுத்தல்கள நடந்ததாக சொல்லியிருக்கும நிலையில், புகாா எதுவும் கொடுக்காததால், மேற்படி துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது வீட்டில் மூத்த பெண் எ ன்பதாலும் எனக்கு இரண்டு தங்கைகள் இருப்பதாலும், அவர்களின் எதிர்கால வாழ்வு குறித்து தான் புகார் எதுவும்

WEB COPY

கொடுக்கவில்லை. தற்போது எனது சகோதரிகள் இருவருக்கும் திருமணமானதால் தற்போது அவ்வாறு பிரச்சனை வரும் என்கிற அச்சம் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

WEB COPY